## காவல் துறையின் வெற்றி எத்தனை வழக்குகள் பதிவு செய்யப்பட்டன என்பதில் மட்டும் இல்லை;

# எத்தனை குற்றங்கள் தடுக்கப்பட்டுள்ளன என்பதில்தான் அடங்கியிருக்கிறது!

## சட்டப்பேரவையில் காவல்துறை மானியக் கோரிக்கையில் மனித நேய மக்கள் கட்சித் தலைவர் முனைவர் எம்,எச்,ஜவாஹிருல்லா பேச்சு!

சென்னை, செப். 7 -

**சட்டப் பேரவையில் காவல்துறை மானியக் கோரிக்கையில் மனித நேய மக்கள் கட்சித் தலைவர் - முனைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா பேசுகையில், காவல் துறையின் வெற்றி எத்தனை வழக்குகள் பதிவு செய்யப்பட்டன என்பதில் மட்டும் இல்லை; எத்தனை குற்றங்கள் தடுக்கப்பட்டுள்ளன என்பதில்தான் வெற்றி அடங்கியிருக்கிறது என்று குறிப்பிட்டார்.**

சட்டப் பேரவையில் முனைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா பேசியதாவது:

காவல் மற்றும் தீயணைப்பு துறைகளினுடைய மானியக் கோரிக்கையில், மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தக் காவல் துறை மானியக் கோரிக்கைக்கு வருவதற்கு முன்பு, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரின் கவனத்திற்கு, நான் ஏற்கெனவே என்னுடைய நாகப்பட்டினம் தொகுதியிலுள்ள திரு மருகல் ஒன்றியத்தில் 54 வருவாய் கிராமங்கள், 39 ஊராட்சிகள், திட்டச்சேரி பேரூராட்சி, 209 குக்கிராமங்கள் அமைந்திருக்கின்றன. இந்த திருமருகல் ஒன்றியத்தை தனி வட்டமாக அறிவிக்க வேண்டுமென்கிற ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறேன். இதுபோன்ற பல கோரிக்கைகளுக்கு இந்த அவையிலே பதிலளித்த நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், மக்கள் தொகை கணக்கெடுப்பிற்கு பிறகு அதுகுறித்து முடிவெடுக்கப்படும் என்று சொன்னார்கள். நான் சொன்னதைவிட குறைவான கிராமங்கள் உள்ள பகுதிகள்கூட இதே நாகப்பட்டினம் மாவட்டத்தில் தனி வட்டமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே, இதற்கு முன்னுரிமை அளித்து, இந்த திருமருகல் ஒன்றியத்தை தனி வட்டமாக, தாலுகாவாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

### நீதியரசர் இராஜேந்திர சச்சார் அறிக்கை!

2007 ஆம் ஆண்டு வெளியான நீதியரசர் இராஜேந்திர சச்சார் அறிக்கை, காவல் துறையில் முஸ்லிம்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கின்றது என்று 20 ஆண்டுகளுக்கு முன்பு சொன்னது. இது இந்தியாவில் பல மாநிலங்களில் உள்ள நிலை. தமிழ்நாட்டில் எங்களுடைய கோரிக்கையை ஏற்று, எங்களுடைய கோரிக்கை என்று நான் அழுத்தம் திருத்தமாக சொல்கிறேன். ஏனென்றால், எங்களுடைய கோரிக்கையை ஏற்றுதான் செப்டம்பர் மாதம், 2007ல் முஸ்லிம்களுக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் அன்றைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தனி இட ஒதுக்கீட்டை வழங்கினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு பிறகு காவல் துறையில் முஸ்லிம் காவலர்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. அதற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதனால்தான் நாங்கள் நடத்திய, தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம் நடத்திய நன்றி அறிவிப்பு மாநாட்டில் பங்கு கொண்டு, தமிழ்நாட்டினுடைய அன்றைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், அந்த நன்றி அறிவிப்பு மாநாட்டில் பங்கு கொண்டதே எங்களுடைய கோரிக்கையை ஏற்று அந்த 3.5 விழுக்காடு இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டது என்பதற்கான அடையாளமாக இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் காவல் துறையில் 2007 முதல் இதுவரை எத்தனை முஸ்லிம் காவல் ஆய்வாளர்கள் இருக்கிறார்கள் என்பதைப் பற்றிய ஒரு வெள்ளை அறிக்கையை இந்த அரசு தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு காலையில் உரையாற்றிய நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், நீண்டகால முஸ்லிம் சிறைவாசிகள் விடுதலை குறித்து ஒரு கருத்தைச் சொன்னார்கள். சென்ற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் நீண்டகால சிறைவாசிகள் 13 பேர் மட்டுமல்ல அதற்கு முன்பாகக் ஒரு 7 பேர் சேர்த்து 20 பேருக்கு மொத்தமாக ஒரு விடுதலை கொடுத்த அரசு சென்ற திராவிட முன்னேற்றக் கழக அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல furlough என்கிற நீண்ட விடுப்பு, இதுவரை தமிழ்நாட்டில் எந்த அரசுமே அமல்படுத்தவில்லை. முதன்முதலாக furlough என்கிற முறையில் நீண்டகால சிறைவாசிகளுக்கு நீண்ட விடுப்பும் கொடுத்த அரசு திராவிட முன்னேற்றக் கழக அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் உச்சநீதிமன்றத்தில் அப்போது தாக்கல் செய்யப்பட்ட ஒரு வழக்கில் சொல்லப்பட்ட affidavitஐப் பற்றி குறிப்பிட்டார்கள். அந்த affidavit விலக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல், அரசினுடைய கவனத்திற்கு கொண்டு செல்லாமல் அதை தாக்கல் செய்ததற்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதையும் நான் இந்த நேரத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

1829 ஆம் ஆண்டு லண்டன் பெருநகர காவல் துறையை நிறுவிய Sir Robert Peel என்ன சொல்கிறார் என்றால், "The police are the public and that the public are the police, the police being only members of the public who are paid to give fulltime attention to duties which are incumbent on every citizen in the interests of community welfare and existence" என்று சொல்கிறார்.

அதாவது, காவல் துறையினரே பொது மக்கள். பொது மக்களே காவல் துறையினர். பொது மக்களின் நலனுக்காகவும், சமூகத்தின் பாதுகாப்பிற்காகவும், ஒவ்வொரு குடிமகனும் ஆற்ற வேண்டிய கடமைகளை முழுநேரமாகச் செய்வதற்காக, ஊதியம் பெறும் பொது மக்களின் ஒரு பிரிவினரை காவல் துறையினர் என்று Sir Robert Peel குறிப்பிடுகிறார். இவர்தான் நவீன காவல் துறையினுடைய தந்தை என்று போற்றப்படுகிறார். அவர் வகுத்த காவல் துறைக்கான அடிப்படை கொள்கைகள் சுமார் 200 ஆண்டுகளுக்குப் பிறகும் ஜனநாயக நாடுகளுக்கு வழிகாட்டியாக இருக்கின்றன. இந்த அடிப்படையில்தான் இன்று தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் நீங்கள் சென்றாலும், ஒரு வாசகத்தைப் பார்க்கலாம். பழக இனிமை, பணியில் நேர்மை, இதுவே நமக்குப் பெருமை என்று குறிப்பிட்டுள்ளது. எனவே, இந்த அடிப்படையில் காவல் துறையினுடைய செயல்பாடுகள் அமைய வேண்டும்.

காவல் துறையினுடைய வெற்றி எத்தனை வழக்குகள் பதிவு செய்யப்பட்டன என்பதில் மட்டும் இல்லை. எத்தனை குற்றங்கள் தடுக்கப்பட்டன. எவ்வளவு அமைதி நிலவுகிறது. காவல் துறையின் மீது மக்கள் எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்பதில்தான் அதன் உண்மையான வெற்றி அடங்கியிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அதேபோல, காவல் நிலையம் என்பது ஒரு சாதாரண அலுவலகம் அல்ல. நீதியைத் தேடி வரும் ஒவ்வொரு சாதாரண குடிமகனுடைய முதல் கதவு. சட்டம்ஒழுங்கு ஒரு சுடர் என்றால், அதை



அணையாமல் காக்கும் சிமிழ்தான் காவல் துறை. காவல் துறை சட்டம்ஒழுங்கு என்ற சுடரை மனிதநேயக் கண்ணாடியிட்டு காக்க வேண்டும். வேலியே பயிரை மேய்வது போல, சிமிலே சுடரை அணையவிடக் கூடாது. மனித உரிமைகளைக் காப்பதில் காவல் துறை மிகப் பெரிய அளவில் தன்னுடைய பங்களிப்பை அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

காவல் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) மானியக் கோரிக்கையினுடைய கொள்கை விளக்கக் குறிப்பை முழுவது மாகப் படித்துப் பார்த்தேன். அதில் ஒருசிலவற்றை மட்டும் இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்பு கின்றேன். கொள்கை விளக்கக் குறிப்பில் குழந்தைகள் பாதுகாப்பு குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது. அதில், இந்த குழந்தைகள் பாதுகாப்புத் தொடர்பாக இந்த அரசு ஒரு SOPநிலையான செயல்பாட்டு நடைமுறைகள் வகுக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறது. இதற்கு ஓர் ஆலோசனையாக சிலவற்றை நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். ஏனென்றால் நாளைய தலைமுறையினரான குழந்தைகளுடைய பாதுகாப்பு நமது அனைவரினுடைய கடமையாக இருக்கிறது. தமிழ்நாட்டில் குழந்தை களின் பாதுகாப்பையும், அவர்களுக்குச் சட்டத்தின்கீழ் உரிய பாதுகாப்பு மற்றும் மறுவாழ்வையும் உறுதி செய்வதில் குழந்தை நல காவல் அலுவலர் அதாவது, Child Welfare Police Officer மற்றும் சிறப்பு இளஞ்சிறார் காவல் பிரிவு Special Juvenile Police Unit ஆகியவற்றின் பங்கு மிக முக்கியமானது.

### குழந்தையின் பராமரிப்பு பாதுகாப்புச் சட்டம்!

இளஞ்சிறார் நீதி. குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்புச் சட்டம் 2015 ஒவ்வொரு காவல் நிலையத்திலும் காவல் துணை ஆய்வாளர் அளவிலான குழந்தைகள் நல காவல் அலுவலரை நியமிக்கவும், ஒவ்வொரு காவல் மாவட்டத்திலும் சிறப்பு இளஞ்சிறார் காவல் பிரிவை அமைக்கவும், தெளிவான சட்ட அடிப்படைகளை வழங்குகிறது. இந்தப் பிரிவு துணைக் காவல் கண்காணிப்பாளர் பதவிக்கு குறையாத அலுவலரின் தலைமையில் அந்த மாவட்டத்தின் குழந்தைகள் நல காவல் அலுவலர்களையும், இரண்டு சமூகப் பணியாளர்களையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். இந்த அமைப்பு இளஞ்சிறார் நீதி சட்டத்திற்கு மட்டுமல்ல; POCSO சட்டம், குழந்தைகள் திருமணத் தடுப்புச் சட்டம், குழந்தைகள் மற்றும் வளரிளம் பருவத் தொழிலாளர்கள் சட்டம், மனித கடத்தல் தடுப்பு நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு சட்டங்களின் அமலாக்கத்தில் காவல் துறையினுடைய பங்கு எப்படி இருக்கின்றது என்பதை வழிவகுக்கிறது.

இப்போது என்ன நிலை இருக்கிறது என்றால், குழந்தை நலப் பணிக்கு ஒரு கூடுதல் பொறுப்பாக ஒரு துணை ஆய்வாளருக்குக் கொடுக்கப்படுகிறது. அவர் நாள் முழுவதும் காலையிலிருந்து சட்டம்ஒழுங்குப் பிரச்சினைகளைப் பார்த்துவிட்டு, மாலையில் இந்தப் பணியை செய்கிறார். எனவே, என்னுடைய கோரிக்கை என்னவென்றால், குழந்தை நல காவல் அலுவலர் என்பதற்கு ஒரேயொரு பணி அது குழந்தைகளுடைய உரிமைகளை காக்கக்கூடிய முழுப் பணியாக சட்டப்பூர்வமாக அவருக்கு அந்தப் பொறுப்பை வழங்க வேண்டும். CWPO மற்றும் SJPU சிறப்பு சிறார் காவல் பிரிவு அலுவலர்களுக்குத் தொடர்ச்சியான சிறப்புப் பயிற்சி வழங்க வேண்டும். அவர்கள் ஒருவேளை இடமாற்றம் செய்யப்பட்டால்கூட, வேறு பணிகளுக்கு மாற்றப்படாமல், இதே குழந்தை நலப் பணிகளை அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

தமிழ்நாடு முழுவதும் ஒருங்கிணைந்த child friendly policing framework ஒன்று உருவாக்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் ஒரு முக்கியமான செய்தியையும் இந்த அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். History sheeters என்று சொல்லப்படக்கூடிய சரித்திர குற்றப் பதிவாளர்கள் குறித்த செய்தி. சென்னை உயர் நீதிமன்றம் இப்போது அல்ல, பல ஆண்டுகளாக, பல வழக்குகளில் history sheeters என்ற முறை அரசமைப்புச் சட்டத்தினுடைய 19 (1) (iv) மற்றும் அரசமைப்புச் சட்டத்தினுடைய 21வது பிரிவிற்கு எதிரானது என்று சொல்லியிருக்கிறது. இரண்டு வழக்குகளை நான் மேற்கோள் காட்ட வேண்டுமென்றால், 2008ல் S.Vani vs The Superintendent Of Police on 15 September, 2008 (S. Vani vs Sivganga Inspector) என்ற வழக்கில் சரித்திர பதிவாளர்களுக்கு speaking orders இல்லாமல், non speaking order மூலமாக இந்த குண்டர் சட்டத்தை, அதாவது அவர்கள்மீது சரித்திரப் பதிவாளர்கள் ஏட்டை திறந்ததற்காக அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறது.

இதேபோல, Sabari @ Sabarinathan @ Sabarivasan vs The Inspector Of Police on 9 January, 2019 (Sabari vs Inspector of Police, 2018)ல் உள்ள வழக்கில் சென்னை உயர் நீதிமன்றம் குற்றப் பதிவாளர் சரித்திரப் பதிவாளர் ஏட்டை திறப்பதற்கு அதை எப்படி பராமரிக்க வேண்டும், அதை எப்படி மூட வேண்டும் என்பதற்கு மிகத் தெளிவான வழிகாட்டு தல்களை வழங்கியிருக்கிறது. இந்த சரித்திரப் பதிவாளர்கள் என்பது விடுதலைப் பெற்ற இந்தியாவில் உருவாக்கப்பட்ட நடைமுறை அல்ல. ஆங்கிலேய காலக்கட்டத்தில் அவர்களுக்கு எதிரான சில சமூகங்களை, குற்றம் செய்யக்கூடிய சமூகம் என்று வர்ணித்து அவர்களுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்டதுதான் சரித்திரப் பதிவாளர் முறை. நம்முடைய விடுதலைப் பெற்ற இந்தியாவினுடைய அரசமைப்புச் சட்டத்திற்கு எதிராக இருக்கக்கூடிய history sheeters சரித்திர பதிவாளர்களுக்கான அந்தச் சட்டம் நமது சட்டப் புத்தகத்தில் இருக்கக் கூடாது, தமிழ்நாட்டில் இருக்கக் கூடாது. அதை ஒழிப்பதற்கு இந்த அரசு முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

2011ல் நான் இந்த அவையில் இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது, காவல் மானியக் கோரிக்கையிலே நான் பேசியபோது, காவல் நிலையங்களில் CCTV cameraக்கள் பொருத்தப்பட வேண்டுமென்று ஒரு கோரிக்கை வைத்தேன். அன்றைய முதலமைச்சர் அம்மையார் அவர்கள் அதற்கு உத்தரவிட்டார்கள். சென்ற திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் அந்த CCTV cameraக்கள் மிகச் சிறப்பான முறையில் இயங்கக்கூடியவகையில் அது மேலும் விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

இப்போது, த.வெ.க. அரசுக்கு நான் வைக்கக்கூடிய கோரிக்கை என்னவென்றால், காவல் நிலையங்களில் மட்டுமல்ல, சில வழக்குகளில் குறிப்பாக, பட்டியலின மக்கள், பட்டியலின பழங்குடியினர்கள் தொடர்பான வழக்குகளிலும், அதேபோன்று உயர் நீதிமன்றம் சில வழக்குகளில் துணை காவல் கண்காணிப்பாளர் அந்த வழக்கை விசாரிக்க வேண்டும் என்று சொல்லக்கூடிய வழக்குகளும், துணை காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திலும் நடைபெறுகிறது. எனவே, காவல் நிலையத்தை தாண்டி, DSP அலுவலகங்களில் துணைக் கண்காணிப்பாளர் அலுவலகத்திலும் இந்த CCTV camera அமைக்க இந்த அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தமிழ்நாட்டில் இயங்கக்கூடிய CBI, NIA, Narcotics Control Bureau இந்த அலுவலகங்களிலும், அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதற்கு இந்த CCTV cameraக்களை பொருத்துவதற்கு இந்த அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

### அருணா ஜெகதீசன் ஆணையம் : விவாதம்!

இந்த அவையிலே அருணா ஜெகதீசன் ஆணையம் குறித்த விவாதங்கள் எல்லாம் நடைபெற்றது. 2018 ஆம் ஆண்டு மே 22 ஆம் தேதி, நாசகர ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக தூத்துக்குடியில் காவல் துறை நடத்திய துப்பாக்கி சூடு, தமிழ்நாடு காவல் துறை வரலாற்றில் ஒரு கருப்பு நாள் என்று சொன்னால் அது மிகையாகாது. அதற்காகத்தான் சென்ற ஆட்சியில் நீதியரசர் அருணா ஜெகதீசன் அவர்கள் தலைமையிலான விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டது. அந்த விசாரணை ஆணையம் 21 காவல் அதிகாரிகளை, நான் சொல்வது சாதாரண Constable அல்லது ஒரு SI அல்ல. உயர் நிலையில் இருக்கக்கூடிய 21 அதிகாரிகளை பெயர் குறிப்பிட்டு அவர்களுக்கு எதிராக கொலை வழக்கு உள்ளிட்ட குற்றவியல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொன்னது.

பிறகு உயர் நீதிமன்றத்தில் CBIக்கு அந்த வழக்கு மாற்றப்பட்டது. CBI விசாரணையிலும்கூட எந்தவிதமான முன்னெடுப்பும் இல்லை. நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்வது என்னவென்றால், நீதியரசர் அருணா ஜெகதீசன் அளித்த அந்த அறிக்கையின் அடிப்படையில் த.வெ.க. அரசு ஒரு Special Investigation Team (SIT) அமைத்து, (மணியடிக்கப்பெற்றது) அந்த SIT அடிப்படையில் இதற்கு நீதி காண வேண்டும். குற்றம் செய்த ஒரு காவல் துறை அதிகாரியும்கூட சட்டத்தின் பிடியிலிருந்து தப்பவிடக் கூடாது என்று இந்தநேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, 2011 முதல் 2014 வரை கூடங்குளம் அணுமின் நிலையத்திற்கு எதிராக மக்களைக் காப்பாற்றுவதற்காக நடைபெற்ற அந்தப் போராட்டம். அந்தப் போராட்டத்தில் 249 வழக்குகள் தொடுக்கப்பட்டன. அதில் பல வழக்குகளை, majority of the. . . அதிகமான வழக்குகளை சென்ற ஆட்சியில் அந்த வழக்குகள் எல்லாம், திரும்பப்பெறப்பட்டன. ஆனால், 53 வழக்குகள் இப்போது 14 ஆண்டுகளாக இன்னும் நிலுவையிலேயே இருக்கின்றது. இதனால், கன்னியாகுமரி உள்ளிட்ட பகுதிகளில், அதாவது, வெளிநாடு செல்ல வேண்டும் போன்ற விஷயங்களுக்காக வேண்டி கடவுச் சீட்டு பெற முடியாத ஒரு நிலை இருக்கின்றது. எனவே, இதையும் இந்த அரசு சரி செய்ய வேண்டுமென்று இந்தநேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

நான் சார்ந்திருக்கிற நாகப்பட்டினம் மாவட்டம், இன்றைக்கு நீங்கள் பார்த்தீர்களென்றால், ஒரு பக்கம் வேளாங்கண்ணியில் புனித ஆரோக்கிய மாதா ஆலயம் இருக்கின்றது. நாகூரில் தர்கா இருக்கின்றது. அதேபோல, சிக்கலில் சிங்காரவேலர் ஆலயம் இருக்கின்றது. இங்கு நிறைய பக்தர்கள் பல்வேறு மதங்களைச் சார்ந்தவர்கள் வருகிறார்கள். இந்த ஆலயங்களில் திருவிழாக்கள் நடக்கும்போது தமிழ்நாட்டில் குறிப்பாக, 10க்கும் மேற்பட்ட மாவட்டங்களிலிருந்து காவல் அதிகாரிகள், காவலர்கள் பாதுகாப்புப் பணிக்காக வருகிறார்கள். அவர்களை தற்காலிக இடங்களில்தான் தங்க வைக்கப்படுகிறார்கள். அதேமாதிரி, நாகப்பட்டினம் பேரிடர்களுக்கு அதிகமாக உள்ளாகக்கூடிய ஒரு மாவட்டம். எனவே, காவலர்கள், தீயணைப்பு வீரர்கள் இவர்கள் தங்குவதற்காக தமிழக அரசின் சார்பாக நாகப்பட்டினத்தில் அவர்களுக்கான தங்குமிடங்கள் இந்த அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சொல்லி, என்னுடைய தொகுதிக் கோரிக்கைகளை இந்த அவையில் பேசியதாக நீங்கள் பதிவு செய்ய வேண்டும். அதை எழுத்துப்பூர்வமாக உங்களிடம் தருகிறேன் என்று சொல்லி, இந்த வாய்ப்புத் தந்தமைக்காக மீண்டும் நன்றி தெரிவித்து, விடைபெறுகிறேன். நன்றி.

### தொகுதிக் கோரிக்கைகள்:

நாகப்பட்டினம் தொகுதி, திருக்கண்ண புரம் காவல் நிலையத்திற்கு சொந்த கட்டடம் மற்றும் காவலர் குடியிருப்பு கட்டித் தரப்பட வேண்டும்.

நாகப்பட்டினம் தொகுதி, திட்டச்சேரி, நாகூர், வெளிப்பாளையம் காவல் நிலையங்களுக்கு புதிய காவலர் குடியிருப்புக் கட்டித் தரப்பட வேண்டும்.

தேர்தல் பணியில் ஈடுபடுத்தப்பட்ட காவலர்களுக்கு பயணப்படி வழங்கிட வேண்டும்.

வாகனம் தரப்படாத ஆய்வாளர் மற்றும் உதவி ஆய்வாளர் நிலையில் இருப்போருக்கு பெட்ரோல் படி வழங்கிட வேண்டும்.

காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும்.

நாகப்பட்டினம் மாவட்டம், தீயணைப்புத் துறையில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டும்.

நாகப்பட்டினம் மாவட்டம், வெளி மாவட்டங்களிலிருந்து வரவழைக்கப்படும் வீரர்கள் தங்குவதற்கு தங்கும் விடுதி அமைத்துத் தர வேண்டும்.

நாகப்பட்டினம் மாவட்டம், தீயணைப்பு நிலையங்களுக்கு மரம் அறுக்கும் இயந்திரங்கள் அதிக அளவில் வழங்கப்பட வேண்டும்.

நாகப்பட்டினம் மாவட்டம், வெள்ளம் சூழ்ந்த பகுதிகளிலிருந்து மக்களை மீட்க சிறிய அளவிலான ரப்பர் படகுகள் வழங்கப்பட வேண்டும்.

காவல் துறையினருக்கு நிகரான ஊதியம் தீயணைப்புப் படை வீரர்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

நாகப்பட்டினம், தீயணைப்பு நிலையத்தில் புதிய குடியிருப்பு கட்டித் தரப்பட வேண்டும்.

நாகப்பட்டினம் தொகுதி, திருமருகல் தீயணைப்பு நிலையத்திற்கு அனைத்து வசதிகளுடன்கூடிய புதிய சொந்தக் கட்டடம் கட்டித் தரப்பட வேண்டும்.

பாம்புகள் பிடிப்பதற்கான உபகரணங்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் அதிக எண்ணிக்கையில் வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறு எம்.எச்.ஜவாஹிருல்லா பேரவையில் பேசினார்.



கழக மறுசீரமைப்பு தொடர்பான நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க செயற்குழுக் கூட்டம் மாவட்டக் கழக அலுவலகம் கலைஞர் அரங்கில் மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் தலைமைக் கழக பிரதிநிதிகள் முத்துராஜா எம்.எல்.ஏ., மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் ஜோயல் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. மாவட்ட துணைச் செயலாளர் தமயந்தி வரவேற்புரையாற்றினார். உடன் மேயர். கோ. ராமகிருஷ்ணன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆ.பிரபாகரன், கே.கே.சி.பிரபாகரன், மாநில நிர்வாகிகள் ஆவின் ஆறுமுகம், கணேஷ் குமார் ஆதித்தன், மாவட்ட துணைச் செயலாளர் மைக்கேல் உள்பட ஒன்றிய, நகர, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதி உள்பட கழகத்தினர் பலர் உள்ளனர்.



கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் தலைமையை ஏற்று நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் ஜோயல்,புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் முத்துராஜா ஆகியோர் முன்னிலையில் ம.தி.மு.க. மாநில சிறுபான்மை பிரிவு மாநில துணைச் செயலாளர் பத்தமடை கே.வி. மலுக்காமலி,பத்தமடை சிறப்பு நிலை பேரூராட்சி மன்ற ம.தி.மு.க.உறுப்பினர் ஏ.எம்.பிரம்மாள் பிவி,புறநகர் மாவட்ட ம.தி.மு.க.துணை செயலாளர் வீரவநல்லூர் வேலம்மாள் ஆகியோர் அக்கட்சியிலிருந்து விலகி தங்களை கழகத்தில் இணைத்துக் கொண்டனர். உடன் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.